## சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்

## O.S. No. 165/2022

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 12.06.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Elangali(PW1) | வயது | 70 |
| தந்தை பெயர் | Munusamy | மதம் | |
| இனம் | | வட்டம் | |
| விலாசம் | Thiruvottriyur | | |

<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் செய்யப்படும் முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதியின் கணவர் ஆவேன். வாதி தரப்பு சாட்சியாக நீதிமன்றத்தில் ஆஜராகிறேன். வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். என் தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.த.ச.ஆ.1 - வாதியின் தாயார் பச்சையம்மாள் என்பவர் 14.11.1997 அன்று இறந்தது சம்மந்தமான இறப்பு சான்றிதழின் கணினியின் நகல்.

வா.த.ச.ஆ.2 - வாதியின் சகோதரியான ஜெயலட்சுமி என்பவரின் இறப்பு சான்றிதழின் கணினியின் நகல்.

வா.த.ச.ஆ.3 - வாதியின் மகளான பவானி என்பவர் பிரதிவாதிக்கு எதிராக திருவொற்றியூர் மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 56/2019 தாக்கல் செய்யப்பட்ட பிராதின் சான்றிட்ட நகல்.

வா.த.ச.ஆ.4 - வாதியின் மகளான பவானி என்பவர் பிரதிவாதிக்கு எதிராக திருவொற்றியூர் மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 56/2019 தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையின் சான்றிட்ட நகல்.

வா.த.ச.ஆ.5 - வாதியின் மகளான பவானி என்பவர் பிரதிவாதிக்கு எதிராக திருவொற்றியூர் மாவட்ட உரிமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 56/2019 ல் 08.02.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் நகல்.

வா.த.ச.ஆ.6 - கடந்த 14.03.2016 அன்று வாதி அவரது மகளான பவானி என்பவருக்கு தாவா சொத்து சம்மந்தமாக எழுதி கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரம்.

வா.த.ச.ஆ.7 - கடந்த 18.02.2020 அன்று வாதி அவரது மகளுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில் பத்திரத்தை ரத்து செய்து எழுதிய தான ரத்து.

மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.